



நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதி ஜக்கனாரை ஊராட்சிக்குட்பட்ட வள்ளுவர் நகர் சமுதாய கூடத்தில் 20.08.2025 அன்று நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம். ராஜூவுடன் பொதுமக்கள் அளிக்கும் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அரசு துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளை பார்வையிட்டனர். உடன் அரசுத் துறை அதிகாரிகள்,மாவட்ட அவைத்தலைவர் போஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் Expo செந்தில், கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன், குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் மற்றும் CTN ஃபாருக் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட

# மாநகர, ஒன்றிய, நகர, பேரூராட்சி பொறியாளர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் –அமைச்சர் எஸ்,ரகுபதி – கே.கே.செல்லப்பாண்டியன் அறிக்கை!





புதுக்கோட்டை, ஆக.22-

புதுக்கோட்டைதெற்கு மாவட்ட கழக செயலாளர் இயற்கை வளம் மற்றும் சுரங்க துறை அமைச்சர் எஸ் ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல் லப்பாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்திற்குட் பட்ட மாநகர, ஒன்றிய, நகர பேரூர் கழகத்திற்க்கு உட்பட்ட பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக் கான நேர்காணல். புதுக் கோட்டை மாவட்ட திமுக அலுவலகத்தில் இன்று (22 ஆம் தேதி-வெள்ளிக் கிழமை) காலை 9 மணி அள வில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் மண்டல பொறுப்பாளரு மான பரமேஷ் குமார் நேர் காணலில் கலந்து கொள்கி றார். ஆகவே புதுக் கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூராட்சிக்குட் பட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் நேர்காணலில் தவறாமல்கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு புதுக் கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட. கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டி யன் ஆகியோர் தமது அறிக் கையில் கூறி உள்ளனர்.

### நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் அரசு

# பட்டுக்கூடு அங்காடி வளாக அடிக்கல் நாட்டு விழா!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. ஆய்வு!

நாமக்கல், ஆக.22-

பாராளுமன்ற உறுப்பி னர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.20 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு பட்டுக்கூடு அங்காடி வளா கத்திற்கு அடிக்கல் நாட்டி, பட்டு விவசாயிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளதை முன் னிட்டு நாமக்கல் மாவட்ட கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்க ளவை உறுப்பினரும், நாமக் கல் மாவட்ட மத்திய கூட்டு றவு வங்கித் தலைவரு மான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் செய்தி யாளர்களிடம் தெரிவித்த தாவது,

தமிழ்நாடு அரசின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவ ளர்ச்சித் துறையானது, பட்டு விவசாயிகள், பட்டு நூற்புத் தொழிலில் ஈடுப டும் தொழில்முனைவோர் கள் மற்றும் பட்டு வளர்ப்பு சார்ந்த பல்வேறு செயல்பா டுகளுக்கு தனது சேவை களை வழங்கி வருகிறது. 'பட்டுவளர்ச்சித் துறை' சேலத்தை தலைமையிட மாக கொண்டு ஈரோடு, தரு மபுரி, வேலூர், திருச்சி மற் றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஐந்து மண்டல அலுவலகங் கள் மூலமாக பட்டு வளர்ச்சி செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பட்டு விவசாயிகளின் நலன் கருதி, இங்கு உற்பத்தி செய் யப்படும் பட்டுக்கூடுகளை உள்மாவட்டத்திலேயே சந் தைப்படுத்த ஏதுவாக கடந்த 2021 ஆம் ஆண்டு இராசிபுரம் பகுதியில் அரசு பட்டுக்கூடு அங்காடி நிறுவ உத்தரவிட்டார். இது தமிழ் நாட்டின் 17 ஆவது அரசு பட்டுக்கூடு அங்காடி ஆகும்.

பட்டுக்கூடு அங்காடி யினை அனைத்து வசதிகளு டன் கூடிய ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங்காடி வளா கமாக மேம்படுத்திட திட்ட மிடப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக் கீடு கோரப்பட்டது. அதன் அடிப்படையில், ரூ.2.20 கோடி ஒதுக்கீடு பெறப் பட்டு, இராசிபுரம் ஆணைக் கட்டிப்பாளையம் பகுதி யில் புதிய ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங்காடி வளா கம் அமைச்சர் பெருமக்க ளால் அடிக்கல் நாட்டப்ப டவுள்ளது. மேலும் 147 விவசாயிகளுக்கு ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் பட்டு வளர்ப்பு கருவி உள் ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட வுள்ளது.

மேலும், புதிய ஒருங்கி ணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்தில் இடி ரேடிங் முறையில் பட்டுக் கூடு ஏலம் நடத்திடும் முறை அமல்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் வர்த்தகமா னது 4 மடங்கு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மேலும் விவசாயிகள் உற்பத்தி செய் யும் பட்டுகூடு உற்பத்திக்கு நல்ல விலை கிடைப்பதோடு, அவர்க ளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஏது வாக அமையும். இராசிபு ரம், புதிய ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்திற்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்திட ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு மாநில அரசி டம் இருந்து பெறப்பட்டுள் ளது. மேலும், இராசிபுரம், புதிய ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளா கத்தில் புதிய பட்டுநூற்பு அலகு மற்றும் பட்டு முறுக்கு அலகு ஆகியவை நிறுவிடும் திட்டங்களும் பட்டுவளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்படவுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராசி புரம் ஒன்றிய கழகச் செய லாளர் கே.பி.ஜெகநாதன், உதவி இயக்குநர் (பொ) க.நிஷாந்தி உட்பட தொடர்புடைய துறை அலு வலர்கள் கலந்து கொண்ட னர்.




புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி, புதுக்கோட்டை தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட வடவாளம் ஊராட்சி, இச்சடி பகுதியில் சாலை விரிவாக்க பணி நடைபெற்றதால் புதுக்கோட்டையில் இருந்து தஞ்சை பகுதிக்கும், தஞ்சை பகுதியில் இருந்து புதுக்கோட்டை பகுதிக்கும் செல்லக்கூடிய பேருந்துகள் புறவழிச் சாலையை மட்டுமே பயன்படுத்துவதாகவும், இச்சடி பகுதிக்குள் பேருந்து வந்து செல்ல பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை வந்த நிலையில், புதுக்கோட்டை போக்குவரத்து துறை மேலாளர் அவர்களை தொடர்பு கொண்டு சாலை பணி முடிவு பெற்றுள்ள நிலையில் இச்சடி கடைவீதி பகுதிக்குள் பேருந்துகள் இயக்க வலியுறுத்தி இருந்தார் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அதன் தொடர்ச்சியாக இச்சடி பகுதிக்குள் பேருந்துகள் வந்து செல்லும்படி கொடி அசைத்து துவங்கி வைத்தார். புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா இந்நிகழ்வில் ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### தமிழ்நாடு அரசின் "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின் கீழ்

# முன்னாள் படைவீரர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல். ஏ.வழங்கினார்!

திருவாரூர்,ஆக. 22-

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டா லின் அவர்கள், சென்னை யிலிருந்து காணொளி காட்சி வாயிலாக முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் "முதல்வரின் காக் கும் கரங்கள்" திட்டத்தினை தொடங்கி வைத்ததனைத் தொடர்ந்து, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட திருமஞ்சன வீதி நகரத்தார் இல்லத்தில் முன்னாள் படை வீரர்களுக்கு நலத் திட்ட உதவிகளை சட்ட மன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் வழங்கி னார். மாவட்ட ஆட்சித்தலை வர் மோகனச் சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்கி தங்கள் வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்களால் அறிவிக்கப் பட்ட 'முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்கள் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரை வங்கி கள் மூலம் கடன் பெறு வதற்கு வழிவகை செய்யப் படுகிறது.

மேலும், கடன் தொகை யில் 30 விழுக்காடு மூலதன மானியமும் 3 விழுக்காடு வட்டி மானியமும் வழங்கப் படும், இவர்களுக்குத் திறன் மற்றும் தொழில் முனை வோர் மேம்பாட்டுப் பயிற்சி போன்ற தேவை யான பயிற்சிகளும் அரசால் வழங்கப்படுகிறது. இராணுவப் பணியின்போது உயிரிழந்த படைவீரர்களின் கைம்பெண்களும் இத் திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

இந்த நிகழ்ச்சியில் 2 முன்னாள் படைவீரர் களுக்கு ரூ.4 லட்சத்து 32 ஆயிரத்து 327 மதிப்பில் முதலீட்டு மானியத் தொகை யினை சட்டமன்ற உறுப்பி னர் பூண்டி.கே.கலை வாணன் மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனச் சந்திரன் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில், நகர்மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில், துணைத்தலைவர். அகிலா சந்திரசேகர் நகர் மன்ற உறுப்பினர்கள் வாரை. எஸ்.பிரகாஷ்,ராமு உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்துத் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியம் ஒலியமங்கலம் வெட்டுக்காடுவைச் சேர்ந்த ஆசிரியர் பழனியாண்டி மகன் வினித் குமார் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயில தேர்வாகியுள்ளார் அவருக்குபுதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

### அஞ்சல்துறையின் நவீன மயமாக்கல் மற்றும்

# டிஜிட்டல் மயமாக்கல் வெறும் கண்துடைப்பு!

## ஒன்றிய அமைச்சரின் பதிலுக்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. அதிருப்தி!



புதுடெல்லி, ஆக.22-

அஞ்சல் துறையின் நவீனம யமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் வெறும் கண்துடைப்பு என ஒன்றிய அமைச்சர் அளித்த பதில்களுக்கு கே.இ.பிரகாஷ் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கே.இ.பிரகாஷ் எம்.பி. கூறியிருப்பதாவது:-

ஒன்றிய அரசின் அஞ்சல் துறை நவீனமாக்கல் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் எந்த அள வுக்கு இந்தியாவின் கிராமப்புற மக்களுக்கு பயனளித்துள்ளது என்பது குறித்து, இன்று நாடா ளுமன்றத்தில் தொலைத்தொ டர்பு துறை அமைச்சகத்திடம் கேள்வி எழுப்பினேன். ஏற்க னவே, இந்த அரசு கிராமப்பு றங்களுக்கு வங்கிச்சேவை களை போதுமான அளவுக்கு எடுத்துச் செல்ல வில்லை என் பது, நான் எழுப்பிய 2381 கேள்வி எண் மூலம் தெளிவா கியிருந்தது. இந்த நிலையில், தொலைத்தொடர்பு துறை குறித்த கேள்விகளை எழுப்பி னேன்.

ஆனால், வழக்கம் போல தன்னுடைய தொழில்நுட்ப அலங்கார வார்த்தைகளால் நிரம்பிய பதில்களை அளித்து ஒன்றிய அரசு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

**புதிய மென்பொருள் அறிமு கம்; ஆனால், பணியாளர்களுக்கு பயிற்சியில்லை!** தொலைத் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச் சித் துறை இணை அமைச்சர் டாக்டர்.பெம்மசானி சந்திரசே கர் அளித்த பதிலில், DOP IT 2.0 என்ற திட்டம் 35,785 கோடி செலவில் தொடங்கப்பட்டிருப்ப தாக சொல்லியிருக்கிறார். இதன் மூலம், அஞ்சல் மற்றும் நிதிச் சேவைகளை ஒருங்கி ணைக்கப் போவதாக குறிப்பிடு கிறார். இதற்காக, 'Advanced Postal Technology (APT)' என்ற புதிய உள்நாட்டு மென்பொ ருளை 1.64 லட்சம் தபால் நிலையங்களில் பயன்படுத்தப் போவதாக சொல்கிறார்.

ஆனால், எதற்காக இந்த மென்பொருள் உருவாக்கப்பட் டது, இது எவ்வளவு சிறப்பாகச் செயல்படும் என்பதற்கான தக வல்கள் இல்லை. நாடு முழுவ தும் பழைய மென்பொருளை நீக்கிவிட்டு, புதிய மென்பொ ருளை நிறுவுவதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அதற் கான தொழில்நுட்ப பயிற்சி பணியாளர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளதா, அதில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளை சரிசெய்ய திட்டங்கள் உள்ளதா என்பது குறித்த விவரங்கள் இல்லை.

அஞ்சல் அலுவலகங்களில், QR code பணப் பரிமாற்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டி ருப்பதாக அமைச்சர் சொல்கி றார். இந்தியாவில் இதை எத் தனை கிராமப்புற மக்கள் உண்மையில் பயன்படுத்துகி றார்கள் என்பதைப் பற்றிய தக வல் இல்லை. QR Code பணப் பரிமாற்ற முறைக்கு விரைவில் கட்டணம் விதிக்கப்போவதாக செய்திகள் வரும் நிலையில், அதை தொலைத்தொடர்பு துறை எப்படி கையாளப்போகி றது என்பதற்கு விளக்கம் இல்லை. இந்த இரண்டுக்கும் பதில் இல்லாத வரை, இது வெறும் கண்துடைப்பு நடவடிக் கையே.

**ஆண்ட்ராய்ட் ஃபோன்கள் அளித்தால் மட்டும் போதுமா?**

கிராமப்புற கிளை அஞ்சல் அலுவலகங்களுக்கு ஆண்ட் ராய்ட் மொபைல் ஃபோன்கள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச் சர் சொல்கிறார். இந்த மொபை ல்களில், அஞ்சல் துறையே உருவாக்கிய IMA (Internal Mobile App) செயலி மூலம், Digital signatures மற்றும் Instant delivery status updates போன்ற பல வசதிகள் வழங்கப் படுவதாகச் சொல்கிறார்.

ஆனால், இந்தக் கருவிக ளைப் பயன்படுத்தும் பணியா ளர்களுக்கு போதுமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்த முக்கியத் தகவல் இல்லை ஆய்வுகளின் படி, இந் தியாவின் கிராமப்புறங்கள் உள் ளிட்ட பல இடங்களில் இணை யத் தொடர்பு தொடர்பான தொழில்நுட்பக் குறைபாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது. உட்புறம் இந்த குறைகளை சரி செய்யாமல், வெளிப்புறம் மொபைல் ஃபோன்களை அளிப்பதால் மட்டும் என்ன பயன்? இதற்கு ஒன்றிய அரசி டம் பதில் இல்லை.

**புதிய புதிய பெயர்களில் திட் டங்கள்; ஆனால், புகார்கள் குறையவில்லை**

அஞ்சல்துறையில் Core Banking Solution (CBS) கீழ் ATM facilities, Internet Banking, Mobile Banking போன்ற வசதி கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்ப தாக அமைச்சர் சொல்கிறார். ஆனால், இந்தச் சேவைகள் அனைத்தும் நகரங்களில் உள்ள மக்களுக்கு மட்டுமே பெரும்பாலும் பயன்படுகின் றன என்பது தெளிவு. இந்நிலை யில், கிராமப்புறங்களில் உள்ள ஏழை, நடுத்தர மக்கள் இதை எந்த அளவுக்குப் பயன்படுத்து கிறார்கள், அப்படி பயன்படுத்தி னால் அது குறித்த தரவுகள் எங்கே போன்ற கேள்விக ளுக்கு விடையில்லை.

India Post Payments Bank (IPPB) சேவைகள் நாடு முழுவ தும் 1.64 லட்சம் இடங்களில் கிடைப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த இடங் களில் எல்லாம் Virtual

Debit Card, Post Office Savings Account linkage with IPPB accounts, online payment for Post Office Saving schemes, Aadhaar Enabled Payment System (AePS) உள்ளிட்ட பல திட்டங்கள் செயல்பாட்டில் இருப் பதாக அமைச்சர் தெரிவிக்கி றார். ஆனால், இதிலும் எத்தனை கிராமப்புறங்கள் பயன்பெறு கின்றன, அங்கெல்லாம் இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத் தப்பட்டுள்ளதா?

மேலும், ஒன்றிய அரசு பெருமையாக குறிப்பிடும் ஆதார் மூலம் பணம் செலுத் தும் முறையான AePS போன்ற சேவைகளில் ஏற்படும் தொழில் நுட்பக் கோளாறுகள் மற்றும் பணப் பரிவர்த்தனை தோல்வி கள் ஆகியவற்றை ஒன்றிய அரசு கணக்கில் எடுத்துள்ளதா என்றும் தகவல் இல்லை. எந்த சூழ்நிலையிலும் வாடிக்கையா ளர்கள் தங்கள் பணத்தை இழக்காத வகையில், இதை மேம்படுத்த அவர்களிடம் என்ன செயல்திட்டம் உள்ளது என்பதும் தெரியவில்லை.

Mail and Parcel Optimization Project (MPOP) என்ற திட்டம் பார்சல் சேவை களை நவீனப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். ஆனால், பார் சல்கள் சேதமடைவது, குறிப் பிட்ட நேரத்திற்குள் ஒப்படைக் கப்படாதது போன்ற புகார்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக் கின்றன. அனைத்து பார்சல்க ளும் கண்காணிக்கப்படும் அஞ் சல்களாக (accountable articles) மாற்றப்பட்டதாக ஒன் றிய அரசு சொன்னாலும், அந்த கண்காணிப்பு முறை எவ்வ ளவு துல்லியமாக செயல்படுகி றது? இந்தத் திட்டம் நடைமு றையில் என்ன முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளது?

ஒட்டுமொத்தமாக பார்க்கை யில், அஞ்சல் துறையின் நவீன மயமாக்கல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் நடவடிக்கைகள் வெறும் பெயரளவிலான திட் டங்களாக இல்லாமல், கிராமப் புற மக்கள் உள்ளிட்ட அனைத் துத் தரப்பு மக்களின் தேவை களை உண்மையாக பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும். அதற்கு, திட்டங் களை அறிவிப்பதோடு மட்டுமல் லாமல், சரியான கட்டமைப்பு வசதிகளையும், திட்டங்க ளின் செயல்பாட்டை கண்காணித்து மேம்படுத்தும் அமைப்பும் ஒன் றிய அரசு ஏற்படுத்த வேண்டும்.


அஞ்சல் துறை தான் கிராமப் புற மக்கள் பயன்படுத்தும் எல் லைக்குள் இருக்கும் முக்கிய மான தொலைத்தொடர்பு மற் றும் வங்கி சேவை. அதில் ஒன் றிய அரசின் நிர்வாகப் பிழைக ளுக்கு இடமிருக்கக்கூடாது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மே.சு. சண்முகசுந்தரம்

### ஆகஸ்ட் 22 (2021)



**இளமைப் பருவத்திலேய கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்தே பணியாற்றி வந்தவர்.**

**1950ஆம் ஆண்டு தான் பிறந்த ஊரில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மதுராந்தகம் வட்ட முதல் செயலாளராகவும், நகர நெசவாளர் அணியிலும், இலக்கிய அணியிலும் பொறுப்பு வகித்தவர்.**

**அய்யன் திருவள்ளுவர் அறக்கட்டளையை உருவாக்கி, அதன்மூலம் மாணவர்களுக்கு பரிசு வழங்குதல், மக்களுக்கான மருத்துவ முகாம் போன்றவற்றை நடத்தியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**